முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.11.2023**, புதன்கிழமை

1. ஞான வாழ்வு மக்களுக்கு அருள
ஞானியாக வந்த அரங்கா
தானதரும வழிமுறையோடு
தருமவான்களாக மக்கள் தேற
2. தேற வழிகாட்டும் தேசிகனே
தெரிவிப்பேன் உன் பெருமை கூறி
அறமென அறிவுரை ஆசிதனை
அருளுவேன் சோபகிருது துலை திங்கள்
3. திங்களிலே இருபான்நவதிகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 29 ம் நாள், 15.11.2023, புதன்கிழமை)
தேசிகன்கேட்க மூர்த்தி நாயனாரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் வழி
ஆறுமுகனார் காட்டுகின்ற
தரும ஞான தனிவழி ஆகும்
தரணியோர் ஏற்று வருக
5. வருகவே வாழ்வில் மாற்றம்
வளரும் ஞான பலமாக
தரும குணம் வளருவதுடன்
தன்னை ஆய்வு செய்யும்
6. செய்யும் தனிப்பெருந் தன்மை
சேவைநிலை பிறவிப்பயன்
அய்யமற அனைத்தும் விளங்கி
அகிலமதில் வாழுகின்ற காலமே

7. காலமே வந்த நோக்கமுடன்
கடமை ஆற்றும் திறன்
வேலவன் வழிபாடு முறைகள்
விளங்கி ஞானத் தெளிவு கூடி

8. கூடியே அரங்கன் அவதார
குருவருள் பலம் அறிந்து
நாடியே முழு சரணாகதியாக
ஞானியர் கொள்கை ஏற்று

9. ஏற்று உலகெலாம் பரப்ப
இணையிலா சேவை ஆற்றி
ஆற்றல்மிக்க அரங்கன் சேவை
அனைவரும் ஏற்கும் வண்ணம்

10. வண்ணமுடன் தொண்டாற்றிட
வையகம் அரங்கன் அவதார
எண்ணமாக உருமாறியே
இனி வருங்காலம் ஞானவான்கள் நிரம்ப

11. நிரம்பவே ஞான உலகமாகும்
நிலமதனில் ஞான ஆட்சி மலர்ந்து
அருந்தவசி நோக்கம் நிறைவேறும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–